DEPOSITION OF WITNESS

Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, VANUR.

Calender - C.C.No. 517/2025
Miscellaneous -

Sessions -

Deposition of witness for Prosecution PW1 (LW1)
Defence

Name : Mohandass HC

Father Name /
Husband Name :

Village :

Taluk :

Caste : -

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of 05th March 2026

எதிரிகளுக்கு மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

முதண்மை விசாரணை

நான் தற்போது திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் தமைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.05.2025 அன்று நான் கோட்டக்குப்பம மதுவிலக்கு அமல்பிரிவு தலைமை காவலராக பணியிலிருந்தேன். அப்போது ஆய்வாளர் மீனா தலைமையில் அவருடன் நானும் த.கா.பாண்டியன்

ஆகியோருடன் திருச்சிற்றம்பலம் கூட்ரோடு பேருந்து நிறுத்தம் வாகன சோதனை செய்துகொண்டிருந்தபோது பாண்டி டூ சென்னை மார்க்கமாக டிஎன்.16 ஜே 6927 என்ற உறீரோ ஸ்பிளன்டர் பிளஸ் இருசக்கர வாகனத்தை வழக்கின்எதிரி சுந்தர் ஓட்டிக்கொண்டும் பின்னர் வழக்கின் மற்றொரு எதிரி ராம்குமார் அமர்ந்து கொண்டு வந்தவர்களை நிறுத்தி விசாரித்தோம். அவர்கள் வைத்திருந்த உடைமைகளை சோதனை செய்தபோது
பாண்டிச்சேரி மதுபானங்கள் Mansion House 180ml brandy 48 பாட்டில்கள் இருந்தது அதில் 3 பாட்டில்கள திறந்து மூடிய நிலையில் இருந்தது.

மேற்படி பாட்டில்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட இருசக்கர வாகனம் ஆகியவைகளை எங்கள் முன்னிலையில் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றினார். கைப்பற்றுதல் மகசரில் நானும் பாண்டியனும் சாட்சி கையொப்பம் செய்தோம்.

என் கையொப்பம் 2வதாக உள்ளது. சாட்சி பாண்டியன் கையொப்பம் 1வதாக உள்ளது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆகும். மேற்படி கைப்பற்றப்பட்ட இருச்க்கர வாகனத்தின் இரு புகைப்படங்கள் அ.சா-ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கைப்பற்றப்பட்ட Mansion House 180ml brandy 48 பாட்டில்களின் புகைப்படங்கள் **அசா.ஆ.3 ஆகும்.** பின்பு ஆய்வாளர் எதிரி மற்றும் கைப்பற்றுதல் மகசருடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.159/ 2025 பிரிவுகள் 4(1)(a) , 4(1)(h) TNP Act, 4(1)(C), 4(1)(A) TNP Amendment Act, எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றேன் என்று ஆய்வாளர் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் பிள்ளையார் கோவில் அருகே என்று குறிப்பிட்டுள்ளதே தவிர குறிப்பிட்டு எநத இடம் என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வாகனத்தின் எந்த ˙இடத்தில் வைத்து வழக்கு சொத்தை எதிரிகள் எடுத்து வந்ததாக ஆய்வாளர் விசாரணையில் நான் குறிப்பிட்டு சொல்லவிலலை என்றால் சரிதான். கூட்ரோடுலிருந்து எங்க்ள காவல் நிலைத்திற்கு செல்லும் நேரம் 10நிமிடம் என்றால் சரிதான்.

என்னுடன் அந்நிய சாட்சிகள் யாரும் பார்வை மகசரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் எந்த மதுபானங்களையும் எடுத்து வரவில்லை என்றாலும் புள்ளி விவர கணக்கிற்காக எனது ஆய்வாளர் தாக்கல் செய்த தவறான வழக்கிற்கு தற்போது தவறாக சாட்சியம அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக ளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

ஒம்/- என்.பிரீத்தி,
நீதித்துறை நடுவர்,
வானூர்.